**செய்தி வெளியீடு எண். 309** **நாள் 15.6.09**

**பத்திரிக்கைச் செய்தி**

**மதுரை காமராஜர் பல்கலைக் கழக தொலைநிலைக் கல்வி இயக்ககம் அறிமுகம் செய்துள்ள " நுகர்வோர் சட்டங்கள் " ஓராண்டு டிப்ளமோ படிப்பில் சேர்ந்து அனைவரும் பயனுற தமிழக அரசு வேண்டுகோள்:**

தமிழகத்தில் மாநில அரசு நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பல்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அரசு, உள்ளூர் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் உதவியுடன் நுகர்வோர்க்கு போதுமான ஆர்வத்தை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக கிராமப் பகுதிகளில் நுகர்வோர் விழிப்புணர்வை பரப்புவதில் அரசு அதிக ஈடுபாடு காட்டி வருகிறது.

சில முன்னோடி தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் அரசு பராமரித்து வரும் முகவரி பட்டியலில் பதிவு செய்து கொண்டு அரசு செயல்படுத்தும் நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நலத் திட்டங்களில் தங்களையும் ஈடுபடுத்திக் கொண்டு நுகர்வோர் விழிப்புணர்வு கருத்துக்களை கிராம அளவிலான அடித்தட்டு மக்களுக்கு பரப்பி வருகின்றன. அதில் மகளீர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, கிராம அளவிலான அடித்தட்டு மக்களுக்கு பரப்பி வருகின்றன. அதில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி , கிராம அளவிலான அடித்தட்டு மக்களுக்கான பயிற்சி, நில உடைமை வாங்குதலில் பிரச்சினை தொடர்பான பயிற்சிப் பட்டறை, மருந்துப் பொருட்கள் வாங்குதலில் பிரச்சினை தொடர்பான கருத்தரங்கம் போன்ற விழிப்புணர்வு பயிற்சி / கருத்தரங்கங்கள் அரசுடன் இணைந்து தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

நம் நாட்டின் வருங்கால சமுதாயமான மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற தொலைநோக்கில் 1000 மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிகளில் 2005-2006 மற்றும் 2007 – 2008 ம் ஆண்டுகளில் நுகர்வோர் மன்றங்கள் தொடங்கப்பட்டு அரசின் நோக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. பள்ளிகளில் சிறப்பாக இயங்குவதை தொடாந்து மாநில அரசு கல்லூரிகளிலும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களைத் தொடங்க 2008-2009ம் ஆண்டின் பட்ஜெட் கூட்டத்தொடரில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களால் 500 கல்லூரிகளில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் தொடங்க ரூ.12.50 இலட்சம் நுகர்வோர் பாதுகாப்பு நல நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து வழங்கும் என அறிவிக்கப்பட்டு, அதனடிப்படையில் 500 கல்லூரிகளில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் நிறுவப்பட்டு வருகிறது.

பள்ளி / கல்லூரிகளில் பாடத்திட்டத்தில் நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வை ஒரு பாடமாக சேர்க்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டு அதற்கான

நடவடிக்கைகளில் முழுவீச்சில் இறங்கியுள்ளது. இளங்கலை பட்டப் படிப்பு முடித்து மேற்படிப்பு தொடரும் எண்ணத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும், குறிப்பாக இல்லத்தரசிகள் , ஓய்வு பெற்ற தன்னார்வலர்கள், பணியிலுள்ள நுகர்வோர் தொண்டர்களை கவனத்தில் கொண்டு பல்கலைக் கழகங்களில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து டிப்ளமோ படிப்பு ஏற்படுத்த அரசு முனைந்து வந்தது. அதன் பலனாக, முதலாவதாக, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் வேண்டுகோளிற்கு இணங்க “ நுகர்வோர் சட்டங்கள் “ எனும் ஒருவருட முதுகலை பட்டய வகுப்பு நடப்பு கல்வியாண்டில் துவங்கியுள்ளது. நுகர்வோர் கொள்கைகள், நுகர்வோர் இயக்கம், இந்திய நுகர்வோர் வடிவுருவம், நுகர்வோர் வழிகாட்டுதல் மற்றும் கல்வி, தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், இந்தியாவின் நுகர்வோர் சட்டங்கள், பொருட்கள் சம்மந்தமான இதர சட்டங்கள் நீதி மற்றும் பொதுப் பயன்பாட பற்றிய சட்டங்கள், சுகாதாரம் மற்றும் காப்பீடு பற்றிய சட்டங்கள் , நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான குறைதீர் அமைப்புகள் புகார் அளித்தல், நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 போன்ற பாட திட்டங்கள் இந்த முதுகலை பட்டய படிப்பில் உள்ளது. இந்த பட்டய படிப்பில் சேருவதற்கான கட்டணம் ரூ.15,000/- என அறிவிப்பு செய்துள்ளது.

மாநிலத்தில் உள்ள பிறப் பல்கலைக் கழகங்களிலும் இதே போன்று பட்டயப் படிப்பு துவங்க அரசு ஆவன செய்து வருகிறது.

அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை விட அதிக விலைக்கு விற்பது, உணவு கலப்படம், போலியான பொருட்கள், நேர்மையற்ற வணிக நடைமுறை, தவறான வழிகாட்டும் விளம்பரங்கள் போன்ற முறைகேடுகளிலிருந்து தங்களை காத்துக் கொள்ள மிக நுட்பமான கல்வி அறிவு அனைவருக்கும் தேவைப்படுகிறது. எனவே இளங்கலை பட்டப் படிப்பை முடித்து மேற்கொண்டு தொழில் ரீதியாக கல்வி கற்க ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரையும் மதுரை பல்கலைக் கழக தொலைநிலைக் கல்வி இயக்ககம் அறிமுகம் செய்துள்ள ஓராண்டு பட்டய படிப்பான “ நுகர்வோர் சட்டங்கள் “ என்கிற படிப்பில் சேர்ந்து பயனுற பட்டப்படிப்பு முடித்துள்ள நுகர்வோர் பாதுகாப்பு ஆர்வலர்கள், நுகர்வோர் பாதுகாப்பு இயக்கங்களிலுள்ள உறுப்பினர்கள், குடும்ப தலைவிகள், மாணவர்கள் ஆகியோருக்கு அரசு வேண்டுகோள் விடுக்கின்றது.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9